# அப்துல் கலாம் நினைவிடத்தில் அரசு சார்பில் கலெக்டர் மரியாதை



**ராமேசுவரம், ஜூலை,28-**

மறைந்த இந்திய குடியரசு தலைவர் ஏ.பி.ஜே அப்துல் கலாமின் பத்தாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி ராமேஸ்வரம் அருகே பேய்க்கரும்பு பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவகத்தில் அரசு சார்பில் மாவட்ட கலெக்டர் மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்திய குடியரசு முன்னாள் தலைவரும் விஞ்ஞானியுமான மறைந்த ஏ.பி.ஜே. அப்துல் கலாம் 2015 ஆம் ஆண்டு ஜூலை 27ஆம் தேதி கல்லூரி மாணவர்கள் மத்தியில் உரையாடும்போது உயிரிழந்தார். அவரது உடல் அவர் சொந்த ஊரான ராமேஸ்வரம் அருகே பேய்க்கரும்பு பகுதியில் அடக்கம் செய்யப்பட்டது. இந்த நிலையில் அவர் நினைவாக அடக்கம் செய்யப்பட்ட பகுதியில் தேசிய நினைவகம் மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தேசிய நினைவகத்தில் திறக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை கோடி கணக்கான பொதுமக்கள் அவர் சமாதிக்கு வருகை தந்து பார்வையிட்டு வணங்கிச் செல்கின்றனர்.

இந்த நிலையில் அப்துல் கலாம் இறந்து பத்து ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவரது பத்தாம் ஆண்டு நினைவு தினம் ராமேஸ்வரம் பகுதியில் கடைபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் தேசிய நினைவகத்தில் அமைந்துள்ள சமாதிக்கு அவரது குடும்பத்தினர் காலையில் வருகை தந்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். அதன் பின்னர் அரசு சார்பில் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் வருகை தந்து கலாம் சமாதியில் மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் அரசு அதிகாரிகளும் மலத்துவி மரியாதை செலுத்தினார்கள் இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் அரசியல்வாதிகள் என ஏராளமானோர் அவரது சமாதியில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்

# பெரியகோட்டை ஊராட்சியில் சமுதாய கூடம்: அமைச்சர் சக்கரபாணி அடிக்கல் நாட்டினார்



**ஒட்டன்சத்திரம் ஜூலை.28-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்துக்குட்பட்ட பெரியகோட்டை ஊராட்சி ஒண்டி பொம்பநாயக்கனூரில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அடிக்கல் நாட்டினார்

இந்நிகழ்வின் போது கோட்டாட்சியர் கண்ணன், வட்டாட்சியர் சஞ்சய்காந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காளியப்பன், ஒன்றிய செயலாளர் தர்மராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மலர்விழிச்செல்வி, வட்டாரவளர்ச்சி அலுவலர் பிரபுபாண்டியன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



மதுரை மாநகராட்சி அ.தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களுடன் மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும்,முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நேற்று ஆலோசனை நடத்தினார். இதில் நிர்வாகிகள் பா.குமார், பேராசிரியர் உசிலை ஜெயபால், ஏ.பார்த்திபன் மற்றும் மாமன்ற எதிர்கட்சி தலைவர் சோலைராஜா மற்றும் கவுன்சிலர்கள் ரூபினிகுமார், ஜெ.மாணிக்கம், வசந்தாதேவி, எஸ்.எம்.டி.ரவி, ஏ.மாயத்தேவன், முத்துமாரிஜெயக்குமார், நாகஜோதிசித்தன், பிரேமாடிமிட்டிராவ், பி.கே.எம்.மாரிமுத்து, கிருஷ்ணமூர்த்தி, சொக்காயி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## வத்தலக்குண்டு அருகே

# அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கான பூமி பூஜை



**வத்தலகுண்டு, ஜூலை 28-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு ஒன்றியம் சேவுகம்பட்டி பேரூராட்சி எம்.வாடிப்பட்டி 11-வது வார்டு பெருமாள் கோவில் அடிவாரத்தில் 15– வது நிதி ஆணைய சுகாதார மானியத்தின் கீழ் ரூ.1கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் அடிப்படை கட்டமைப்பு களுடன் கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட பூமி பூஜை நடைபெற்றது.

முன்னதாக சேவுகம்பட்டி பேரூராட்சி பொதுமக்களின் அடிப்படை மற்றும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ பெரியசாமி, செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோருக்கு பேரூராட்சி சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா தங்கராஜன் தலைமை தாங்கினார். வத்தலக்குண்டு தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் முருகன், ‘சேவுகம்பட்டி திமுக பேரூர் செயலாளர் தங்கராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி செயல் அலுவலர் ரமேஷ் பாபு வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி ரெக்ஸ், சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தெய்வ ராணி விஜயன், பேரூராட்சி இளநிலை பொறியாளர் கருப்பையா, பேரூர் சிறுபான்மை அணிஅமைப்பாளர்மாசிலாபௌக்ஸ்பேரூர் அ வைத்தலைவர் போத்திராஜ். காங்கிரஸ் கட்சி பேரூர் தலைவர் நாகராஜன், கம்யூனிஸ்ட் கட்சிநிர்வாகிபெருமாள்சாமி,பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் தனபால், தவபாண்டியன், பாலமுருகன், ராஜேந்திரன், மாரியப்பபிள்ளை, ஆண்டி,சாந்தி, நாகராணி, பாண்டியம்மாள், ஜோதி மணி, கோகிலா, வார்டு செயலாளர் கோப்பெரும்வழுதி,

வடக்கு ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர் சகாப்தின், கலந்து கொண்டனர். ஒன்றிய பிரதிநிதி ரமேஷ், அரசு ஒப்பந்ததாரர் ராமலிங்கம் மற்றும் சேவுகம்பட்டி நகர, ஒன்றிய நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டார்கள். முடிவில் பேரூராட்சி சார்பாக இளநிலை உதவியாளர் அம்ம முத்து கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

## அருப்புக்கோட்டையில்

# ஊர்தி தொழிலாளர் சங்க கூட்டம்



**அருப்புக்கோட்டை, ஜூலை 28-**

அருப்புக்கோட்டை அருகே காந்திநகரில் தமிழ்நாடு இலவச அமரர் ஊர்தி மற்றும் தாய் சேய் நல ஊர்தி தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மாநில பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அருப்புக்கோட்டை மண்டல தலைவர் பிரபு, மாவட்ட பொறுப்பாளர் கணபதி மற்றும் முனீஸ் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் இலவச அமரர் ஊர்தி மற்றும் தாய் சேய் நல ஊர்தி தொழிலாளர்களுக்கு 16 % ஊதிய உயர்வு வழங்கவும், இலவச அமரர் ஊர்தி மற்றும் தாய் சேய் நல ஊர்திகளை முறையாக பராமரிப்பு செய்யவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில் தமிழ்நாடு இலவச அமரர் ஊர்தி மற்றும் தாய் சேய் நல ஊர்தி தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தை சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாளுக்கு ஸ்ரீரங்கம் கோவிலில் இருந்து சீர்வரிசை பொருள்கள்



**விருதுநகர், ஜூலை 28-**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் ஆடிப்பூர தேர் திருவிழா இன்று காலை நடைபெறுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிலுக்கும் ஸ்ரீரங்கம் கோவிலுக்கும் மங்களப் பொருட்கள் பரிவர்த்தனை செய்யும் வழக்கம் பல ஆண்டுகளாக உள்ளது. இதன்படி ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆடிப்பூரத்தன்று நடைபெறும் தேர் திருவிழாவின் போது ஆண்டாளுக்கு மரியாதையாக ஸ்ரீரங்கம் கோவிலில் இருந்து பட்டு வஸ்திரங்கள், மஞ்சள், குங்குமம், சந்தனம், வளையல், பழங்கள், தாம்பூலம் உள்ளிட்ட மங்கள சீர்வரிசை பொருள்கள் கொண்டு வருவது வழக்கம்.

இந்த ஆண்டு ஸ்ரீரங்கம் கோவிலில் இருந்து மங்களப் பொருட்களை கோவில் தலைமை அர்ச்சகர் சுந்தர் பட்டர் மற்றும் ஸ்ரீரங்கம் கோவில் நிர்வாக அதிகாரியும் இணை ஆணையுருயமான சிவ ராம்குமார் தலைமையில் குழுவினர் நேற்று ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலின் மாட வீதிகள் வழியே மேளதாளம் முழங்க ஊர்வலமாக வந்து கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர். அதனை ஆண்டாள் கோவில் செயல் அலுவலர் சௌ.சக்கரையம்மாள் பெற்றுக் கொண்டார்.

அப்பொழுது ஏராளமான உள்ளூர் வெளியூர் பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து மாலை மதுரை அழகர் கோவில் கள்ளழகர் திருக்கோவிலில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாளுக்கு பட்டு வஸ்திரம் மரியாதைகளை கள்ளழகர் திருக்கோவில் அதிகாரிகள் கொண்டு வந்து சமர்ப்பித்தனர்.

# தொழில்நுட்பம், ஸ்கொலியோசிஸ் அறுவைச் சிகிச்சையில் துல்லியமாகா பாதுகாப்பையும் மேம்படுத்துகிறது

**மதுரை, ஜூலை 28-**

வளர்ச்சியடையும் வயதில் ஆரம்பமாகும் ஸ்கொலியோசிஸ் என்ற முதுகெலும்பு வளைவு குறைபாடு, நேரத்துக்கு சரியான பரிசோதனையின்றி விட்டால் சுவாசக் கோளாறு, நிலையான வலி மற்றும் உளவியல் பாதிப்பு போன்ற விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். தோள்களில் சமநிலை இல்லாமை, இடுப்பில் சாய்வு போன்ற அறிகுறிகளை பெற்றோர் அலட்சியம் செய்யக்கூடாது என்றும், ஆரம்பத்தில் கண்டறிந்து கவனிக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். மிகவும் கடுமையான ஸ்கொலியோசிஸ் அறுவை சிகிச்சைக்கு செல்லும் போது, கம்பியூட்டர் தொலைநோக்கி, 3டிவழிசெலுத்தல் மற்றும் நரம்பு செயல்திறன் கண்காணிப்பு ஆகிய தொழில்நுட்பங்கள் துல்லியத்தையும் பாதுகாப்பையும் அதிகரிக்க முக்கிய பங்கு வகிக்கின்றன. இத்தகைய தொழில்நுட்பங்கள் மூலம் சிக்கலான அறுவைச் சிகிச்சைகளிலும் நரம்பு சேதம் போன்ற அபாயங்களை குறைத்து, வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சிகிச்சை வழங்க முடிகிறது என்று மதுரை ப்ரீத்தி மருத்துவமனையின் முதுகெலும்பு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆர்.சிவகுமார் கூறினார்.

அதே மருத்துவமனையின் மூத்த எண்டோஸ்கோப்பிக் அறுவை நிபுணர் டாக்டர் வினோத் தங்கமணி கூறுகையில், ஒவ்வொரு நோயாளியின் முதுகெலும்பும் தனித்துவமானது. 3டி வழிசெலுத்தல் தொழில்நுட்பம் மற்றும் நரம்பு கண்காணிப்பு முறைகள், திட்டமிடல் மற்றும் செயல்பாட்டில் துல்லியத்தை உறுதி செய்கின்றன. சமீபத்தில், பிறவி முதுகெலும்பு இணைவு காரணமாக ஏற்பட்ட முதுகெலும்பு வளைவுக்கு இந்த நவீன முறைகள் மூலம் ஒரு 14 வயது குழந்தைக்கு பாதுகாப்பான அறுவை சிகிச்சை வழங்கப்பட்டது என்று கூறினார். தொழில்நுட்பம் மேலும் விரிவடையும் பொழுது, இளம் நோயாளிகள் அதிக நன்மை பெறுவார்கள் எனும் நம்பிக்கையும் வெளிப்படுத்தப்பட்டது.

# மேலூர் அருகே தெற்குத்தெருவில் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி



**மேலூர், ஜூலை 28-**

மதுரை மாவட்டம், மேலூர் அருகே உள்ள தெற்குத்தெருவில் கிராம பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள், வடமாடு புகழ் மான் குட்டி காளை பிரதர்ஸ் சார்பாக முதலாம் ஆண்டு மாபெரும் வடமாடு மஞ்சு விரட்டு போட்டி தெற்குத் தெருவில் நடைபெற்றது. இந்த போட்டியில் 15 அணியை சேர்ந்த மாடுபிடி அணி வீரர்கள் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் சிவகங்கை, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து மொத்தம் 15 காளைகள் கலந்து கொண்டன.

போட்டியில் வெற்றி பெற்ற காளையின் உரிமையாளர்களுக்கும், மாடுபிடி வீரர்களுக்கும் ரொக்க பரிசு தொகையும், டிரஸ்ங் டேபிள், குத்து விளக்கு, கட்டில், தென்னங்கன்று போன்ற பரிசுகளை விழா குழுவினர் வழங்கினர்.

இந்த போட்டியை காண சுற்றுப்புற கிராமங்களான தெற்குத்தெரு, நரசிங்கம்பட்டி, மாணிக்கம்பட்டி , மாங்குளம், அரிட்டாபட்டி, வெள்ளரிபட்டி, சிட்டம்பட்டி, கத்தப்பட்டி, கல்லம்பட்டி, சூரக்குண்டு, மேலூர் உள்ளிட்ட சுற்றுப்பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள், மஞ்சுவிரட்டு ரசிகர்கள், வட மஞ்சுவிரட்டு போட்டியை கண்டு களித்தனர். வடமஞ்சுவிரட்டு போட்டியை தெற்குத்தெரு கிராம பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## திருமங்கலம் நகரில்

# சி.எஸ்.ஐ நல்ல மேய்ப்பர் ஆலயத்தில் தாய்மார்கள் பாலூட்டும் அறை திறப்பு



**திருமங்கலம்,ஜூலை 28-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரிலுள்ள சி.எஸ்.ஐ நல்ல மேய்ப்பர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தாய்மார்கள் பாலுட்டும் அறையின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

தென்னிந்திய திருச்சபை மதுரை ராமநாதபுரம் திருமண்டலம் திருமங்கலம் தெற்கு குருசேகரம் சி.எஸ்.ஐ நல்ல மேய்ப்பர் ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனை பெண்கள் சிறப்பு ஞாயிறு ஆராதனையாக நடைபெற்றது. இந்த ஆராதனையினை சபைகுரு அருள் திரு டி.சாம்பிரபு தலைமையேற்று வழி நடத்தினார்.

போதகரம்மா சுகந்த ராணி சாம்பிரபு சிறப்பு ஜெபத்துடன் ஆராதனையை துவக்கி வைத்தார். இந்த ஆராதனையில் ரோஸி ஜோசப் தேவசெய்தியளித்து பெண்கள் சிறப்பு ஞாயிறு தொடர் நிகழ்வினை முன்னின்று நடத்தினார். முன்னதாக சி.எஸ்.ஐ. நல்ல மேய்ப்பர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தாய்மார்கள் பாலூட்டும் அறையின் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

திருச்சபையார் ஏராளமானோர் பங்கேற்ற இந்நிகழ்வினில் சபைகுருகுருசேகர கமிட்டி தலைவர் அருட்திரு டி.சாம்பிரபு சிறப்பு ஜெபம் செய்து தாய்மார்கள் பாலூட்டும் அறையினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வினில் திருச்சபையின் குருசேகர செயலாளர் எ.தேவதாசன், பொருளாளர் டி.தியோடர்சன் எபிதேவவரம், குருசேகர கமிட்டி உறுப்பினர்கள் பயிற்சி குருவானவர்கள் கலந்து கொண்டனர்.

# ஒவ்வொரு டாடா ப்ளே பிஞ்ச் தேர்விலும் துல்கர் சல்மானை கொண்டாடுங்கள்

**சென்னை, ஜுலை 28-**

துல்கர் சல்மான் ஒரு நடிகருக்கு மேல், ஒரு தனி சினிமா உலகம்.இந்த பான்-இந்திய ஹீரோ தனது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்நேரம்.அவரது மறக்க முடியாத படங்களை மீண்டும் நினைவு கூறும் மிகவும் சிறந்த சந்தர்ப்பம். மெதுவாக தீண்டும் காதல் கதைகளா,வாழ்க்கையை புரிந்துகொள்ளும் சாலைப் பயணங்களா துல்கரிடம் இவை அனைத்தும் உள்ளன.அதுவும் ஒரு இயல்புக்கு அப்பாற்பட்டது காந்த நடிப்புடன். ஒரு நட்சத்திர குடும்பத்தில் பிறந்தாலும், தன்னுடைய தனித்திறமையால் எல்லைகளை கடந்த கதாப்பாத்திரங்களை தேர்வு செய்து, தன் மதிப்பைத் தானே நிரூபித்தவர் துல்கர் சல்மான். அதனால் உங்கள் ‘வாட்ச் லிஸ்ட்’ஐ ஒதுக்கி வையுங்கள். இவை அனைத்தும் டாடா ப்ளே பிங்கே-இல் ஒரே ஆப்பில், ஒரே சந்தாவுடன், 30-க்கும் அதிகமான ஓடிடி தளங்களை ஒரே இடத்தில் கொண்டது

டாடா ப்ளே பிங்கே.இப்போ நீங்கள் ஹாட்ஸ்டார், ஜியோ சினிமா, பிபிசி பிளேயர், ஆப்பிள் டிவி+, ஜீ5, ஃபியூஸ்+, ஃபேன்கோடு, ஹால்மார்க், எம்எக்ஸ்பிளேயர், லயன்ஸ்கேட் ப்ளே, ஆஹா, VROTT, சன் NXT, ஸ்டேஷ், ரீல்டிராமா, சௌபால், நம்ம ஃப்ளிக்ஸ், மனோரமாமேக்ஸ், ஐஸ்ட்ரீம், தரங் பிளஸ், ஹங்காமா ப்ளே, ஷேமரூமீ, கியூரியாசிட்டி ஸ்ட்ரீம், EPIC ON,டிராவல்எக்ஸ்பி, DocuBay, ஷார்ட்ஸ்டிவி, ப்ளேஃபிளிக்ஸ், KliKK மற்றும் பலமொத்தம் 30+ ஓடிடி செயலிகள் மற்றும் விளையாட்டுகள் ஆகியவற்றை,ஒரே சப்ஸ்கிரிப்ஷனில் பயன்படுத்தலாம். 30+ ஓடிடி தளங்களில் சிறந்த பொழுதுபோக்கை அனுபவிக்க - டாடா ப்ளே பிங்கே செயலியைப் பதிவிறக்கவும்.

## நத்தம் அரசு கல்லூரியில்

# தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை குறித்த விழிப்புணர்வு முகாம்



**நத்தம், ஜூலை 28-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை குறித்து மாணவ, மாணவிகளுக்கான விழிப்புணர்வு முகாம் நடந்தது.இதற்கு மத்திய ஒன்றிய செயலாளர் சேக்சிக்கந்தர் பாட்சா தலைமை தாங்கினார்.

தி.மு.க. மாவட்ட பொருளாளர் விஜயன், நகர செயலாளர் ராஜ்மோகன், மாநில மாணவரணி துணை செயலாளர் வீரமணி, தொகுதி தேர்தல் பார்வையாளர் ரஞ்சன்துரை, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு உறுப்பினர் சேர்க்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பட்டு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தினேஷ் முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்டத்திற்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து வடக்கு 4-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் ஆர்.பாஸ்கரன் தலைமையில் செல்லூர் ஐம்பது ஈரோட்டில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா,எம் எஸ் பாண்டியன், ஆர் அண்ணாதுரை, பா குமார், பேராசிரியர் ஜெயபால், வி பி ஆர் செல்வகுமார், வக்கீல் அசோகன் ரவிச்சந்திரன் ஜெ.மாணிக்கம், விநாயகமூர்த்தி, ஏ. மாயத்தேவன் கறிக்கடை முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்

# மதுரை அனைத்து மோட்டார் வாகனம் பழுது பார்ப்போர் நலச்சங்கத்தின் பொதுக்குழு கூட்டம்



**மதுரை, ஜூலை 28-**

மதுரை அனைத்து மோட்டார் வாகனம் பழுது பார்ப்போர் நலச்சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

மதுரை அனைத்து மோட்டார் வாகனம் பழுது பார்ப்போர் நலச்சங்கம் சார்பாக சங்கப் பொதுக்குழு கூட்டம் மதுரை அருள்தாஸ்புரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்றஉ நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. சங்க உறுப்பினர்களுக்கு கண் மற்றும் பொது மருத்துவ முகாம் மற்றும் இலவச மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டது. இந்த பொதுக்குழுவில் ஏராளமான ஸ்டால்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மருத்துவ பரிசோதனைகளை குட்செட் தெரு எம்.எம். கண் மருத்துவமனை மற்றும் என்டிசி சிறப்பு மருத்துவமனையை சேர்ந்த மருத்துவக் குழுவினர் மேற்கொண்டனர். இந்நிகழ்வில் சங்கத் தலைவர் மாரி, இணைச்செயலாளர் முத்துப்பாண்டி, பொருளாளர் ரெங்கராஜ், சட்ட ஆலோசகர் முத்துக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# மதுரையில் இன்று மின் தடை ஏற்படும் இடங்கள் அறிவிப்பு

**மதுரை, ஜூலை 28-**

மதுரையில் 28.07.2025 அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக கீழ்காணும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். மதியம் 5 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

சம்பட்டிபுரம் மெயின் ரோடு, ஜெர்மானூஸ் சில பகுதிகள், முத்துராமலிங்க தேவர் தெரு, ஸ்ரீராம்நகர், எச்.எம்.எஸ். காலனி, டோக்நகர் 4 முதல் 16-வது தெரு வரை, தேனி மெயின் ரோடு, விராட்டிபத்து சில பகுதிகள், மாப்பிள்ளை விநாயகர் தியேட்டர், பல்லவன் நகர், முடக்குசாலை, வ.உ.சி. மெயின் ரோடு, ஈ.பி.காலனி, நடராஜ் நகர், அசோக் நகர், டோக் நகர் 1 முதல் 3-வது தெரு, கோச்சடை கிராமம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள், ஜெயில் ரோடு, மேல பொன்னகரம் 8,10,11,12 தெரு, கனரா பாங்க் முதல் டாக்சி ஸ்டாண்ட் வரை, ஆர்.வி. நகர், ஞானஒளிபுபுரம், விசுவாசபுரி 1 முதல் 5-வது தெரு, முரட்டம்பத்ரி, கிரம்மர்புரம், மில் காலனி, ஆரப்பாளையம் பஸ் நிலையம், இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி, கைலாசபுரம், எஸ்.எஸ்.காலனி, வடக்கு வாசல், அருணாச்சலம் தெரு, கம்பர் தெரு, ஜவகர் 1 முதல் 5-வது தெரு வரை, டி.எஸ்.பி. நகர், எஸ்.பி.ஓ. காலனி, சொக்கலிங்கநகர் 1 முதல் 9 தெரு, பொன்மேனி, சம்பட்டிபுரம், பொன்மேனி மெயின் ரோடு, மத்திய சிறைச்சாலை, பாண்டியன்நகர், பைபாஸ் ரோடு, பெத்தானியாபுரம், பாத்திமாநகர், இன்கம்டாக்ஸ் காலனி, இந்திராநகர்

ரெயிலார் நகர், சங்கீத்நகர், விண்வெளி நகர், கூடல் புதூர், ஆனையூர் ஹவுசிங் போர்டு 1 முதல் 6 வரை, பி.எஸ்.என்.எல். ரோடு, காமராஜர் விடுதி, அன்புநகர். அவனியாபுரம் கற்பக நகர், தங்கம் நகர், எம்.எம்.சிட்டி, ஜவஹர் நகர், டி.என்.எச்.பி. பகுதிகள், மல்லிகை வீடுகள், பிரியங்கா அவன்யூ, பைபாஸ் ரோடு, அருஞ்சுனை நகர், மல்லிகை நகர், கிராட்வே, எம்.கே.எம். நகர், சூர்யா நகர், ராதாகிருஷ்ணன் நகர்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## கனமழையால் இடுக்கியில் நிலச்சரிவு:

# மூணார்-தேனி சாலையில் போக்குவரத்து பாதிப்பு

**தேனி, ஜூலை 28-**

கனமழையால் இடுக்கியில் நிலச்சரிவு ஏற்பட்டதால் மூணார்-தேனி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் பல்வேறு பகுதிகளில் பெய்த கனமழை மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மழையால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. கேரளாவில் பெய்துவரும் கனமழையால் இடுக்கியில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. மூணாறில் இருந்து தேனிக்கு செல்லும் சாலையில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. நிலைசரிவு ஏற்பட்டுள்ள சாலையை சீர் செய்யும் பணிகள் தற்போது மும்முரமாக நடந்து வருகின்றன. விரைவில் இப்பகுதியில் போக்குவரத்து சீராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கொடை ரோட்டில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல வேண்டும்

## வர்த்தக சங்க கூட்டத்தில் தீர்மானம்

**வத்தலகுண்டு, ஜூலை 28-**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டார வர்த்தக வியாபாரிகள் சங்க செயற்குழு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் சங்கத் தலைவர் இளங்கோ தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கௌரவத் தலைவர் ரமேஷ், கௌரவச் செயலாளர் கணேசன், ஒன்றிய செயலாளர் முருகன் ஆகியோர்கள் முன்னிலை வைத்தனர்.



நிலக்கோட்டை ஒன்றிய செயலாளர் சுப்பிரமணி வரவேற்பு பேசினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:-

நிலக்கோட்டையில் உள்ள அனைத்து வர்த்தக வியாபாரிகளுக்கும் அரசு வழங்கும் வியாபாரிகளுக்கான நலவாரிய அட்டை சிறப்பு முகாம் நடத்த மாவட்ட ஆட்சித் தலைவரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. தமிழகத்தின் சுதந்திர காலத்திற்கு முன்பே உருவான திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் ரோடு தற்போது பெயர் மருவி கொடை ரோடு ரயில் நிலையங்களில் கடந்த காலங்களில் என்ற ஏராளமான ரயில்கள் நிற்பதை தவிர்த்து வருவதை கண்டித்தும், வருகிற காலங்களில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல மத்திய, மாநில அரசுக்கு கோரிக்கை வைத்து மனு அனுப்புதல் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிலக்கோட்டை காய்கறி மார்க்கெட் மற்றும் பூ மார்க்கெட் அமைந்துள்ள பகுதிக்கு செல்வதற்கு தற்போது ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளதால் கடையில் வியாபாரம் செய்ய முடியாத நிலை நிலவுகிறது அதனை உடனடியாக நிவர்த்தி செய்ய இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. நிலக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகம் இடமாற்றம் செய்வதால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் பாதுகாப்பு இல்லாத இடத்தில் கட்டடம் கட்டுவதை தவிர்த்து உடனடியாக நிலக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகம் தற்போது இருக்கும் இடத்திலேயே காலியா இடத்தில் புதிய கட்டிடம் கட்ட வேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட தலைவர் பாஸ்கரன், மாவட்டச் செயலாளர் பாரதி முருகன், கௌரவ மாவட்ட செயலாளர் சுசி, கிராம ஊராட்சி பொறுப்பாளர் ராமகிருஷ்ணன், சங்க ஆலோசகர் சரவணன், அணைப்பட்டி நடைபாதை வியாபாரிகள் சங்க தலைவர் ராஜா, மாவட்ட நிர்வாக குழு நிர்வாகிகள் ராமன், கணேசன், சந்திரசேகரன், ராமச்சந்திரன், பரமேஸ்வரன், விடுதலை வீரன் ,சந்திரமோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காலநிலை அபாயங்களிலிருந்து பாதுகாக்க, மாங்ரோவ் கொலிஷன் தொடக்கம்..!

**சென்னை, ஜூலை 28-**

நுகர்வோர் மற்றும் தொழில்துறை வணிகங்களில் பன்முகத்தன்மை கொண்ட கோத்ரேஜ் எண்டர்பிரைசஸ் குழுமம், இந்தியாவில் நகர்ப்புற சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முன்னோடி கூட்டணியான மாங்ரோவ் கொலிஷன்-ஐ உருவாக்குவதாக அறிவித்துள்ளது.

சூனாபாய் பிரோஜ்ஷா கோத்ரேஜ் அறக்கட்டளை, *WRI* இந்தியா, *WWF* இந்தியா மற்றும் *M.S.* சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை *(MSSRF)*, டாடா சமூக அறிவியல் நிறுவனம் *(TISS)*, ஸ்டான்ஃபோர்டில் உள்ள நேச்சரல் கேபிடல் புராஜக்ட் மற்றும் கன்சர்வேஷன் இன்டர்நேஷனல் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டாண்மையில் உருவாக்கப்பட்ட இந்த கொலிஷன்-ஆனது, சூழலியல், பொருளாதாரம் மற்றும் சமூக ஈடுபாட்டில் உள்ள நிபுணத்துவத்தை ஒன்றிணைக்கிறது.

கோத்ரேஜ் எண்டர்பிரைசஸ் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் நிரிகா ஹோல்கர் கூறுகையில், “எங்கள் நகரங்களின் மையத்தில் மீள்தன்மையின் வேர்கள் அமைந்துள்ளன. சதுப்புநிலங்கள் வெறும் சுற்றுச்சூழல் இடையகங்கள் அல்ல - அவை கார்பன் பெட்டகங்கள், பல்லுயிர் சரணாலயங்கள் மற்றும் மில்லியன் கணக்கான மக்களைப் பாதுகாக்கும் அமைதியான காவலாளிகள் ஆகும். இக்கூட்டணி மூலம், நகர்ப்புற இந்தியாவில் இத்தைகைய முக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதன் சிக்கலான ஈடுகட்டல்களை வழிநடத்த அறிவியல், கொள்கை மற்றும் மக்கள் ஆகியவற்றை ஒன்றிணைக்க முடியுமென நாங்கள் நம்புகிறோம்.

# ஆரம்பக்கல்வியில் மாற்றத்தை உருவாக்கும் வின்ஸ்டர் ஹவுஸ், சென்னையில் பயணத்தை தொடங்குகிறது

**சென்னை, ஜூலை 28-**

வின்ஸ்டர் ஹவுஸ் என்ற அடுத்த தலைமுறை ஆரம்பக் கல்வி நிறுவனம், சென்னையில் ஜூலை 27 அன்று அதிகாரப்பூர்வமாக அறிமுகம் செய்யப்பட்டது.நிகழ்வில் தொழில்முனைவு வளர்ச்சி தலைவர் கன்வர் சிங், கல்வித் தலைவர் பர்வானி தாவார், மற்றும் நிறுவன குழந்தைப் பராமரிப்பு தலைவர் நேஹா டோல்வானி பங்கேற்றனர். முன்னணி கல்வியாளர்கள், பசுமை பள்ளி நிறுவுநர்கள், மற்றும் ஆரம்பக் கல்வி நிபுணர்கள் இந்த விழாவைச் சிறப்பித்தனர். பாரம்பரிய விளக்கேற்றத்துடன் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. அறிவுக்கும் புதிய தொடக்கத்திற்குமான ஓர் அடையாளமாக .வின்ஸ்டர் ஹவுஸ், அறிவியல் ஆதாரமும் மதிப்புநிலைகளும் அடிப்படையாக் கொள்ளும் கற்றலின் வழியே ஆன்மாவும் எதிர்காலத்துக்கும் தயாரான குழந்தைகளை உருவாக்கும் நோக்கத்தில் இயங்குகிறது. விளையாட்டு, ஆராய்ச்சி, பெற்றோர் பங்கேற்பு மற்றும் மனநலம் ஆகியவை ஒருங்கிணைந்த கற்றல் சூழலை வடிவமைக்கின்றன.கன்வர் சிங் விரிவாக்க திட்டத்தையும் ஃபிராஞ்சைஸ் வளர்ச்சி மாதிரியையும் விளக்கினார்.

பர்வானி தாவார் உலகத் தரநிலை பெற்ற பாடத்திட்டத்தின் அமைப்பையும் தனிப்பட்ட கற்றல் அனுபவத்தையும் விவரித்தார்.நேஹா டோல்வானி, பணியிட நலன் மற்றும் நிறுவனங்களுக்கு குழந்தை பராமரிப்பு தீர்வுகள் குறித்த வின்ஸ்டர் வாக்குறுதியைப் பகிர்ந்தார்.வின்ஸ்டர் வகுப்பறை அனுபவம்.சிறுவர் கற்பனைக்கு ஊக்கமளிக்கும் கற்றல் வளங்கள். நேரடி காட்சியாக வழங்கப்பட்டது. வயதுக்கு ஏற்ற தொழில்நுட்பங்கள் மற்றும் சமூக உணர்வு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.வின்ஸ்டர் ட்ரைப் பெற்றோர் மையம், குடும்பங்களுடன் 360° உறவினை உருவாக்குகிறது.தலைமை குழுவும், விருந்தினரும் இடையே ஆன உரையாடல், புதிய கூட்டணிகளுக்கு வாய்ப்பளித்தது.வின்ஸ்டர் ஹவுஸ் அடுத்த 3 மாதங்களில் புனே, ஹைதராபாத், பெங்களூரில் செயல்படவுள்ளது.அன்பும் தரமும் சேர்ந்த கற்றல் சூழலில், எதிர்கால சிறுவர்களை உருவாக்கும் பணியில் வின்ஸ்டர் ஹவுஸ் புது பாதையை தொடங்கியுள்ளது.

# பரிசுப்பொருள் மற்றும் ஸ்டேசனரி துறையை வலுப்படுத்தும் கூட்டாண்மை!

**சிவகாசி, ஜூலை 28-**

*Paperworld India, Corporate Gifts Show* மற்றும் *Gifts World Expo* ஆகியவற்றின் ஏற்பாட்டாளர்கள் தங்கள் கண்காட்சி இலாக்களை இணைப்பதாக அறிவித்துள்ளனர். டெல்லி, மும்பை, பெங்களூரு மற்றும் கொல்கத்தா முழுவதும் அர்ப்பணிப்புடன் கூடிய கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ள நிலையில், இந்த கூட்டு முயற்சி பரிசுப்பொருள் மற்றும் ஸ்டேசனரி துறையை இந்தியா முழுவதும் கொண்டு செல்ல நீண்டகால உத்திக்கு அடித்தளம் அமைத்துள்ளது. நாட்டின் உயர்மட்ட வணிக மற்றும் நுகர்வு மையங்களில் வலுவான பிராந்திய தளங்களை உருவாக்குவதன் மூலம், ஏற்பாட்டாளர்கள் விரும்பக்கூடிய மாதிரியை வழங்குகிறார்கள்.

*MEX Exhibitions Pvt Ltd* இன் இயக்குநர்களான திருமதி ஹிமானி குலாட்டி மற்றும் திரு. கௌரவ் ஜுனேஜா ஆகியோர் இந்த ஒத்துழைப்பு குறித்து தங்கள் உற்சாகத்தைப் பகிர்ந்து கொண்டனர், “*Gifts World Expo* மூலம் பரிசுப்பொருள் மற்றும் எழுதுபொருள் பிரிவுகளில் *Messe Frankfurt India* உடன் கூட்டு சேருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு, முழு மதிப்புச் சங்கிலியிலும் பங்குதாரர்களுக்கு சேவை செய்யும் ஒரு விரிவான, எதிர்காலம் சார்ந்த தளத்தை உருவாக்குவதன் மூலம் தொழில்துறையை உயர்த்துவதற்கான எங்கள் கூட்டுப் பார்வையை பிரதிபலிக்கிறது. பரிசு கண்காட்சித் துறையில் ஒரு முன்னணி நிகழ்ச்சியாக கிஃப்ட்ஸ் வேர்ல்ட் எக்ஸ்போ தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது, மேலும் இந்தக் கூட்டணி கண்காட்சியாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் இருவருக்கும் விதிவிலக்கான சேவையை வழங்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்தும்.

## கொட்டாம்பட்டி பகுதியில்

# பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் மூர்த்தி வழங்கினார்



**மேலூர், ஜூலை 28-**

தி.மு.க. முன்னாள் தலைவரும், முன்னாள் முதல்வருமான கருணாநிதியின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு கொட்டாம்பட்டியில் உள்ள எட்டிமங்கலம் ஊராட்சி, சென்னகரம்பட்டி ஊராட்சி, பட்டூர் ஊராட்சி, மேலவளவு ஊராட்சி ஆகிய கிராமங்களில் தி.மு.க. சார்பில் குடும்ப அட்டை வைத்துள்ள அனைவருக்கும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மேலூர் தொகுதி பொறுப்பாளர் வ.து.ந.ஆனந்த், கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜராஜன், மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் குமரேசன், மாவட்டஅமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் தற்காகுடி சரவணன், மாவட்ட பிரதிநிதிகள் கண்ணன், எழில் வேந்தன், ஒன்றிய துணை செயலாளர் ராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் எட்டிமங்கலம் பங்கஜம் கணேசன், சென்னகரம்பட்டி ஸ்ரீ தர், கொட்டாம்பட்டி பாலசுப்பிரமணியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பட்டூர் செல்லையா, துணை தலைவர்கள் கலைவாணன், இளஞ்செழியன், கிளைசெயலாளர் பிரசன்னா, மருத்துவ அணி மாவட்ட துணை அமைப்பாளர் திருமாறன், கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாட்டில் முதல் முறையாக கூட்டணி ஆட்சிக்கு மக்கள் வாக்களிக்க போகிறார்கள்

## திருமங்கலத்தில் டிடிவி.தினகரன் பேட்டி



**திருமங்கலம், ஜூலை 28-**

தமிழகத்தில் முதல் முறையாக கூட்டணி ஆட்சிக்கு மக்கள் வாக்களிக்க போகிறார்கள் என திருமங்கலத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் டி.டி.வி. தினகரன் தெரிவித்தார்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே மேலக்கோட்டை பகுதியிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் திருமங்கலம் சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் கலந்து கொண்டு கட்சித் தொண்டர்களுக்கு தேர்தல் பணியாற்றுவது குறித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த டி.டி.வி. தினகரன் கூறுகையில்: தேர்தல் வாக்குறுதியில் விவசாயிகள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், இளைஞர்கள் மாணவர்கள் மாற்றுத்திறனாளிகள் என சொன்ன வாக்குறுதிகள் எதையுமே நிறைவேற்றவில்லை. சுதந்திரத்திற்கு பிறகு இப்படி மோசமான ஆட்சி இல்லை. அ.ம.மு.க. மாநாடு சரியான நேரத்தில் சரியான இடத்தில் அ.ம.மு.க. சார்பில் நடக்கும். வருகிற டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று உறுதியான முடிவெடுப்பார்கள்.

2026 தேர்தலில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் பிரச்சாரம் செய்வேன். இ.பி.எஸ். உடன் இணைவது காலம் பதில் சொல்லாது, உரிய நேரத்தில் நான் பதில் சொல்லுவேன். ஆறு மாதத்தில் எல்லாம் இறுதியான பிறகு தெரியவரும்.2024 பாராளுமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியுடன் நிபந்தனையற்ற ஆதரவுடன் சேர்ந்திருக்கிறோம். 2026 சட்டமன்ற தேர்தல் வரப்போகிறது. நாங்கள் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கிறோம். முதல் முறையாக மக்கள் கூட்டணி ஆட்சிக்கு வாக்களிக்கப் போகிறார்கள். ஆட்சி அதிகாரங்கள் எல்லோருக்கும் பகிர்ந்து அளிக்கும் போது தான் ஊழலற்றத் திட்டங்களை மக்களுக்கு நிறைவேற்ற முடியும். கூட்டணி ஆட்சி குறித்து நான் ஏற்கனவே கூறியுள்ளேன். அமித்ஷாவின் நிலைப்பாடுதான் என்னுடைய நிலைப்பாடு அதில் எந்த மாற்று கருத்தும் இல்லை என்று தெரிவித்தார்.

# ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவிலில் அம்பாள் தேரோட்டம்

## திரளான பக்தர்கள் பங்கேற்பு

**ராமேஸ்வரம், ஜூலை 28-**

ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவிலில் அம்பாள் தேரோட்டம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

ராமேஸ்வரம் ராமநாத சாமி கோவிலில் இந்த ஆண்டின் ஆடித் திருக்கல்யாண திருவிழா விமரிசையாக நடைபெற்று வருகின்றது. நேற்று அம்பாள் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்காக கோவிலில் இருந்து அம்பாள் சிறப்பு அலங்காரத்தில் கிழக்கு வாசல் முன்பு அலங்கரித்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தேரில் எழுந்தருளினார். பின்னர், கோவில் இணை ஆணையர் செல்லத்துரை, உதவி கோட்ட பொறியாளர் மயில்வாகனன், உதவி ஆணையர் ரவீந்திரன், நகர சபை சேர்மன் நாசர் கான் துணை சேர்மன் பிச்சை தட்சிணாமூர்த்தி ஆகியோர் வடம் பிடித்து தேரோட்டத் தொடங்கி வைத்தனர்.

கிழக்கு வாசல் பகுதியில் இருந்து புறப்பட்ட தேரானது வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு ரத வீதி சாலை வழியாக பகல் 12 மணிக்கு நிலைக்கு வந்தடைந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் மற்றும் யாத்திரை பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு தேர் இழுத்தனர்.

திருவிழாவின் 10-வது நாளான இன்று (28.7.2025) ஆடிப்பூர நிகழ்ச்சி நடைபெறுகின்றது. நாளை மறுநாள் தபசு மண்டகபடியில் வைத்து சுவாமி, அம்பாள் மாலை மாற்றுதல் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. அதற்காக கோவிலில் இருந்து சுவாமி, அம்பாள் காலை 10 மணிக்கு தபசு மண்டகப்படிக்கு புறப்பாடு நடைபெறும்.

இந்நிகழ்வை முன்னிட்டு காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கோவில் நடை சாற்றப்பட்டிருக்கும் என்றும் அந்த சமயத்தில் பக்தர்கள் தீர்த்தங்களில் நீராடவும் தரிசனம் செய்யவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும், மாலை 5 மணிக்கு பிறகு கோவில் நடை திறக்கப்பட்டு பின்னர் வழக்கம் போல் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் திருக்கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக 30-ஆம் தேதி அன்று இரவு 7 மணியில் இருந்து 8 மணிக்குள் சுவாமி- அம்பாள் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

